64


சைவாபிமானசங்க வெளியீடு சங்கியை—௫

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவசமய வளர்ச்சி



இது
யாழ்ப்பாணம்
சைவாபிமான சபையாருடைய
வேண்டுகோளின்படி

உடுவில்

ஸ்ரீ சி. நாகையா அவர்கள்
(மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்)
டி. சபையிற் செய்த பிரசங்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவசமய வளர்ச்சி

---

## சைவமென்பது

1. சைவமென்பது சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபாடு செய்யுஞ்சமயமாகும். ஏனைய சமயங்கட்கெல்லாம் படிப்படியான விடங்களைக் கொடுத்துச் சித்தாந்த சைவத்தையே சிறப்பாகக்கொள்ளும். பொதுவாக வேதங்களையும் சிறப்பாகச் சிவாகமங்களையும் பிரமாணமாகக்கொள்ளும். இவை யிரண்டும் இறைவன் வாக்கே! ஆகையால் சில பாகங்களை யெடுக்க, திருத்த, அல்லது சேர்க்க, ஒரு மனிதனுக்கு அதிகாரமில்லை. சிவாகமங்களில் விதிக்கப்பெற்றவற்றை ஏற்காதவழி, தம்மைச் சைவரென்று சொல்ல எவருக்கு முரித்தில்லை.

## தமிழும் சம்ஸ்கிருதமும்

தமிழும் சம்ஸ்கிருதமும் கடவுளாலருளப்பெற்ற பாஷைகளே. ஒன்று மகத்தான பொருள்களைச் சொற்களால் வெளிப்படுத்துவதோடமையாது, சக்தி வாய்ந்த தெய்விக சப்தங்களையுமதிகந்தன்னிடத்துக்கொண்டது. மந்திர சக்தியுடையது. உச்சாரண முறையைப் பெரிதுந் தழுவி நடக்கும். மற்றது சொற்களிற் பெரும் பொருட்செறிவுடைமையோடு இனிய வோசையும் இலகுவிற் பேசக்கூடிய திறமுமுடையது. ஆகையாற்றான், தெய்விகமான செம்பொருளெல்லாம் பொதிந்துள்ள வேதங்களும் ஆகமங்களும் சமஸ்கிருதத்திலேயே உள்ளன; மந்திரங்களும் உள்ளன

போர்க்கின்பம் பயப்பனவும் பொருட்பொலிவுள்ளனவுமான அநேக நூல்கள் தமிழிலுமுள்ளன. தேவபாஷையாகிய சம்ஸ்கிருதத்தை நாடோறும் பேசுவது பெருங்கஷ்டமாகும். தமிழைப் பேசுவது இலகுவும் இன்பமுமாகும். மந்திரவுச்சாரணஞ்செய்து சித்தியடைந்தவர்களோ அநேகர். தமிழைப் பேசியும் படித்தும் இன்புற்றிருப்பவர்களுமோ அநேகர். இதை யறியாதார் இது பெரிது அது பெரிதென்று வீண் சண்டை போடுவர்.

## உட்பகைவர்கள்

சிவாகமந்தான் சைவசித்தாந்தமென்றறியாதவர்கள் தமிழிலிருக்கும் பதினான்கு சாஸ்திரங்களையுமே சித்தாந்த சாஸ்திரங்களென்று மயங்கி விளங்குவர். மெய்கண்டசாத்திரம் பதினான்கும் வடமொழியிலுள்ள ஆகமத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவையும் அவைகளைச் சார்ந்த நூல்களுமே. மிருதிகளும் புராணங்களும் இதிகாசங்களும் வேதங்களின் வழிநூல்களே. மெய்கண்டாருடன்தான் சித்தாந்தசைவமுண்டாயதென்போர் பிராமணத்துவேஷத்தாலெழுந்து சம்ஸ்கிருதத்தைத் தாக்கி, அதன் பின் வேதாகமங்களிலுஞ் சினந்து நிற்குக் தார் அபிமானிகளாவர். இதுகாறுஞ் சைவத்தைப் பீடித்த பிறசத்துராதிகளாகிய பிறவரசினர் மிஷனரிமார் முதலியோரிலும் பார்க்க, உட்பகைவராகிய இவர், பெருங்கேடு விளைக்கிறார்கள். உட்பகைவராகிய இன்னொரு சாராரையும் பற்றி இங்கு கவனித்தல் வேண்டும். சிவாகமங்கள் சைவத்தைப் போற்றுவோர்க்கதையொரு கடுமையான மார்க்கமாத்துறதேயென்றும், தத்தம் வசதிக்கேற்ப நடந்துகொள்ளக் கூடாமற் சிவாகமங்கள் தடைகள் கூறுமென்றும், அரசியல் நோக்கமாகச் சகலருடனும் உறவாடச் சிவாகமங்கள் இடங்கொடுக்கவில்லையென்றும் நினைத்து, பொதுப்பிரமாணங்களாகிய வேதங்களே தங்களுக்குப் பிரமாணமென்று சொல்லுஞ் சில சைவர்களுமிக்காலத்திலுண்டு. சைவ சமயத்தவர்களுக்குச் சிவாகமங்களே சிறந்த பிரமாணங்களென்றிவர்களறியவேண்டும். சிவாகமங்களுக்கு மாறான செய்கைகளொவ்வொன்றும் சைவத்திற்கு மாறான செய்கைகளென்றும் இவர்கள் உணர்வார்களாக.

## இந்து சமயம்

4. இந்து சமயமென்றொரு சமயமில்லை. இது பொதுவாகச் சைவம் வைணவம் முதலிய மார்க்கங்கள் சேர்ந்த ஒரு தொகுதியாகும். சைவர் வைணவர் தத்தமாகமங்களையே முதனூல்களாகக்கொள்வர். தனியே வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளுபவர்கள் சைவர்களல்லர். ஆகமங்கள் தாம் வேதம் பொதுவாகக்கூறும் பொருள்களை எடுத்து விரிவாகச் சொல்லும். அனுசரிக்க வேண்டிய கிரியைகள் படித்தறிய வேண்டிய ஞானப்பொருள்கள் உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள் யாவற்றையும் தெளிவாகவும் விரிவாகவுஞ் சொல்லும். உண்மையில் இந்துக்கள் என்ற பதம் இந்தியாவிலுள்ள மனிதரைக்குறிக்கும்; இந்தப்பதமும் இதைச் சார்ந்த நோக்கங்களும் அதிக தீங்குகளை விளைக்கும். அந்நாளிற் சமணமும் புத்தமும், அதன்பின் இராமக்கிருஷ்ணமும், ஆரிய சமாசம் பிரமசமாசமும், இந்நாளிற் பிராமணத்துவேஷத்தாலெழுந்த வேதாகம நிந்தா மார்க்கங்களாகிய வேதாசல சுப்பிரமணிய மார்க்கங்களும், அரசியல் மோகத்தாலெழுந்த காந்திமதமும் இவைகளில் தலைநின்ற மார்க்கங்களாகும். இவைகள் யாவும் உண்மையான கடவுள் ஞானத்திற்குப் பெருந்தீங்கு விளைக்கும்.

## ஒன்றே கடவுள்

5. இனி மேற்சைவங்கொண்ட பெருநோக்கங்களிற் சிலவற்றையும் அவைகள் மாறிய விதங்களையும் பற்றிக் கவனிப்பேன். ஒன்றே கடவுள்; ஆனால் அவருக்குப் பல மூர்த்தங்களுண்டு. அவைகளை வழிபடுவதுஞ் சிவபெருமானையே வழிபடுவதாகும். ஆகையாற் பல கோயில்கள் பலவிடங்களிலுமுண்டாயின. இதை யறியாதார் சைவர்களைப் பல தெய்வ வணக்கக்காரரென்கிறார்கள்.

ஆன்மா பல; நித்தியமாயுள்ளன; சார்ந்ததன் வண்ணமாகுங்குணமே யுடையன; சுவதந்திரமில்லாதன. ஆகையாற்றான் நல்லோரிணக்கம் முதலிய நல்லொழுக்கக்கட்டுப்பாடுகளெழுந்தன. பேரின்ப விலக்கு பாருக வாழ்க்கையுங் கற்பிக்கப்பட்டது. இப்பொழுது ஆன்மாவுண்டோ இல்லையோ வென்றுந் தெரியாது. சிற்

றின்பத்திலுஞ் சொகுசான வாழ்விலுமே சனங்கள் கண்ணுங் கருத்துமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். தமக்குச் சுதந்திரமுண்டென்று மமதையுங்கொள்ளுகிறார்கள்.

## மலமொன்று.

5. மலமொன்று; நித்தியமாயுள்ளது; சிவனருளில் பாத்திரம் வலியற்றுக்கிடக்குந் தன்மையுடையது; பல தோற்றங்கள் கொண்டு ஆன்மாவைத் தீவினையிலாழ்த்திவிடும். ஆகையாற்றான் மலநீக்கங் கருதிச் சைவாசாரம் வலியுறுத்தப்பெற்றது. இப்பொழுது சைவாசாரங்கள் தடைகளென்றிகழ்ந்து மலமாயையிலகப்பட்டுப் பலர் மகிழ்வார்கள். சிவஞானமுதிக்கவிடாது மேலும் மேலும் சிற்றின்பத்தில் அமிழ்த்திப் பாழாக்குவதே மலத்தின் குணமென்றறியாமற் பலர் முற்போக்கு முற்போக்கு என்று வீணாகப் அமளிக்கின்றார்கள்.

## ஆன்மாக்கள் பல திறமுடையன

ஆன்மாக்களுக்கு அவ்வவற்றின் பக்குவத்திற்கேற்ப நல்வினை தீவினைகளைக் கடவுளே யளந்து தனு கரண புவன போகங்களையும் நல்கிப் பஞ்சகிருத்தியத்தை நடத்துவர். ஆகையாற்றான் ஆன்மாக்கள் பெத்த தசையிற் பல படித்தாயிருக்கின்றன. ஒவ்வொரு ஆன்மாவும் தத்தம் பக்குவத்திற் கேற்ற வழிபாட்டு முறையைக் கைக்கொள்ளவேண்டியதாயிற்று. இதை யறியாதார் ஆன்மாக்கள் யாவுமோர் தரத்தவாயின. ஆகையால் வழிபாட்டு முறைகளும் யாவருக்கு மொருவிதமா யிருக்கவேண்டும். பிறப்பில் யாவரும் ஒரே படியானவர்கள் ஆகையால் யாவரும் சகல உரித்துக்களும் பெறலாமென்று வீண் கலாம் விளைக்கின்றனர்.

## வாழ்க்கை யிலக்குப்பேரின்பம்

வாழ்க்கையிலக்கு முத்தியின்பம் பெறுதலே ஆகையாற்றான் பள்ளிக்கூடங்களும் ஆலயங்களும் வீடுகளும் சனசமுதாய வொழுங்குகளும் சைவாசாரப்படி நடைபெற வேண்டியிருந்தன. இதை யறியாதார் ஐரோப்பியருடைய வாழ்க்கை யிலக்காகிய பணந்தேடு

வதையே யிலக்காக மாற்றிவிட்டனர். தொழில் செய்வதாற்றான் பணஞ்சேரும். ஆகையால் பள்ளிக்கூடங்கள் ஆலயங்கள் வீடுகள் சனசமுகம் யாவுந் தொழில் முறைகளைப்பற்றி யறிபவும், தொழில் பற்றி யெழுந்த வாசாரங்களைக் கைக்கொள்ளவுந் தொடங்கின. இந்த வித்தியாசங்களை யறியாதவர்களாற்றான் சமாசன சமபோசன ஆலயப்பிரவேசக் கலாங்கள் தொடுக்கப்பெற்றன. வாழ்க்கையிலக்கு மாறியதால் வந்த கேடுகளோ அளப்பரியனவாயின. இந்த மாற்றம் படிப்படியாய் வந்தபடியால் இலகுவிலொருவருக்குந் தெரியவில்லை இதுவும் எங்கள் நாகரீகத்தை ஐரோப்பிய நாகரீகம் விழுங்கிவிட்டதென்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றது. எங்கள் நாடு எவ்வளவு தூரம் ஐரோப்பியம் பெற்றுவிட்டதென்று இதுவே வரையறுத்துக்கூறுகின்றது. இந்த மாற்றத்தின் கேட்டையறியாமல், கல்வி யறிவுகளிற் சிறந்தோராக வெண்ணப்படுவோர் பலர் நாங்கள் முன்னேற்றமடைகின்றோமென்று பகிரங்கப் பிரசங்கஞ்செய்வர். இது என்ன நடிப்போ! மடமையோ! சிற்றின்பத்தைப் பேரின்பத்திலும் பெரிதாக யார் தான் கொள்வர்

## பிறப்பிலே வித்தியாசம்

நல்வினை தீவினையை யளந்து திருவருள் கூட்டப்பெற்றதாகிய உடம்போடு கூடிய ஆன்மாக்கள் ஏற்றத்தாழ்வுடையனவாகக் காணப்படுவது உண்மையே. இந்த வித்தியாசம் முக்குணப்பாகுபாட்டால் நிகழும். எனவே சாத்துவிகம் அதிகமுடையனவாயும் இராசத தாமத குணங்கள் அதிகமுடையனவாயும் இவ்வுலகிற் பிராணிகள் தோன்றும். இந்த வித்தியாசம் மோட்சமடையும் வரையும் நிலவுவதும் உண்மையே. இதை அறியாதார் சமத்துவம் பாராட்டுவர் அறியாமையாலெழுந்த விந்தப் பொய்ச்சமத்துவத்தைப்பற்றிப் பகிரங்கப்பிரசங்கங்கள் செய்வோரும் அவர்களைப் புகழுகின்றோருமாகிய பலர் இந்நாளிலுண்டு. ஐரோப்பிய நாட்டிற்கூட, இந்த மோகத் தாண்டவஞ்செய்த காலம் போயொழிந்துவிட்டது. இந்த வுண்மையான வித்தியாச மியற்கையாயுள்ளது. இதனாற்றான் வருண ஆச்சிரமப்பாகுபாடுகள் உளவாயின.

இந்த வியற்கையான பாகுபாட்டிற்கு வாழ்க்கை யிலக்கொட்டிக் கடமைகளெழுந்தன இவைகளே ¿ருபம். இதை யறியாத சிலர் வருணாச்சிரமம் பிராமணராற் சுயநலங் கருதி யுண்டாக்கப்பெற்ற சனசமூகக் கட்டுப்பாடுகளென்று சொல்வார்கள். பணந் தேடுவதுதான் வாழ்க்கையிலக்கென்று கொள்ளுபவர்க்கு வேறெப்படித் தோன்றும். முகங்கூடாததற்குக் கண்ணாடி யென்னசெய்யும்?

## சைவம் ஆசாரத்தைப் பொறுத்தது

சைவம் ஏனைய மார்க்கங்களிலும் பார்க்க அதன் ஆசாரத்தைப்பொறுத்தது. கர்மகாண்டம் ஞானகாண்டம் என்று வேதம் பிரிக்கப்பட்டிருப்பதுபோலச்சைவமார்க்கமும் கிரியைகளும் கொள்கைகளும் பொதிந்த ஓர் நாகரிகமாகும். ஐரோப்பிய நாகரீகமென்றவுடன் அவர்களுடைய உடை நடை பாவனை பழக்க வழக்கம் உணவு மனப்பாங்கு வாழ்க்கை யிலக்கு இன்னோரன்ன யாவுந் திரண்டவோர் வாழ்வென்று யாவருங்கொள்வர். சைவமென்றாலோ ஏதோ சில கிரியைகள் தாமென்று சிலரும், வேறு சிலர் சில நாட்களிற் கோயிலுக்குப் போவது தான் என்றும் நினைக்கின்றார்கள். சைவம் நித்திய நைமித்திய கருமங்கள் பொதிந்ததும் சகல அங்கங்களையும தன்னகத்துள்ளதுமான ஓர் பூரண நாகரீகமாகும். இதை யறியாத குறையே எங்களுக்குற்ற பெருங் குறையாகும். இதை நிவிர்த்தி செய்வதே சைவர்தம் பெருங்கடனாகும்.

## ஞானசாத்திரங்கள் குருமுகமாகக் கற்கவேண்டும்

ஞான சாஸ்திரங்களைக் குருவை நாடிக் கற்கவேண்டும்; எல்லாரும் எல்லாவற்றையும் கற்கவும் எல்லாவற்றையுஞ் செய்யவும் இயலாது. ஆகையாற்றான் சிலர் சில தொழில்களையும் வேறு சிலர் வேறு சில தொழில்களையும் செய்வது நல்லதாயிற்று. இத்தொழில்களையே தருமமென்பர். இவைகளைச்சீடன் பக்குவமறிந்து குரு கற்பிப்பாராகையாற் குருவுக்கமைந்து அவர் சொற்படி நடந்தும் செய்தும் கற்பது நன்மை பயப்பதாயிற்று. சாத்வீக மதிகமுள்ளவர்கட்குச் சாத்வீகத்தை யதிகம் வளர்க்குந் தொழில்களுமேற்பட்டன. இதை யறியாமல் யாரும் கற்கலாமென்றும், யாரும் குருபாராக வரலாமென்றுஞ் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## பெண்கள் வேறு ஆடவர்கள் வேறு

பெண்கள் ஆடவர் என்ற பாகுபாடு உறுப்பளவில் நிற்காமல் குணத்தளவிலும் ஆற்றலிலும் தன்மைகளிலும் வித்தியாசமுடையது. இந்த வித்தியாசம் தாய் மனைவி சகோதரி பிள்ளை முதலிய நிலைமைகளினின்று பெண்ணையும் தகப்பன் கணவன் சகோதரன் முதலிய நிலைமைகளில் நின்றாடவனையுந் தொழில் செய்யும். ஆடவர்கள் பெண் தன்மைகளைப் பெறுவதும், பெண்களாடவர் தன்மைகளைப் பெறுவதும் மாபெருங்கேடு. ஓர் ஆடவன் எவ்வளவு தயவு பொறுமை யாதிய பெண் சீலங்களைப் பழகினாலும் ஒரு தாயைப்போல வரமாட்டான். ஒரு பெண் எவ்வளவு வீரம் பலம் ஆதிய ஆண் குணங்களைப் பெற்றாலும் ஒரு தந்தையைப்போல வரமாட்டான். எனவே ஆண்களுக்கோர் தொழிலும் படிப்பும் பெண்களுக்கோர் தொழிலும் படிப்பும் இருப்பது முறைமையே. இதை யறிந்த நம் முன்னோர் பெண்களை வீட்டிற்கரசிகளாக்கினர். இதை யறியாத சிலர் சிற்றின்ப நுகர்ச்சிக்காக மாத்திரம் வெவ்வேறு உறுப்புக்கொண்டாரொழிய மற்றெவ்விதத்திலும் ஆடவரும் பெண்களும் ஒன்றுதானென்று கொள்வார்கள். இது எவ்வளவு இயற்கைக்கு மாறானதென்றும் கேடுகள் நிரம்பியதென்றும் இவர்கள் உணர்வார்களாக.

## வாழ்க்கை யிலக்கு மோக்ஷமே

வாழ்க்கை யிலக்கு மோக்ஷமடைவதுதான் என்று கொண்டவர்கள் சாத்துவிகம் வளர்த்து இராசத தாமத குணங்களைத் தேய்த்துப் பேரின்பமடையும் முகத்தான் சாத்துவிகம் பெரிதும் வாய்ந்த பிராமண குலத்தினரைத் தேவபூசகராகக் கொண்டனர். பக்குவமறிந்து பரமசிவன் அளந்து கொடுத்ததே பிறப்பு. பக்குவப்பட்ட நல்வினை தீவினைகளை யனுபவிப்பதற்காகவே புதிய தனுகரணமாதியன கொடுக்கப்பட்டன. ஆகையால் பிறப்புக் கொண்டு ஏற்றத்தாட்சி பார்ப்பதுஞ்சரியே. பணமாவது கல்வியாவது கொண்டு பெருமை சிறுமை பாராட்டுவதிலும் இது எவ்வளவு சிறந்த முறை. அப்படிப் பார்க்கத் தொடங்கினாலும் பிறந்த பின் மதி கொண்டு செய்யுந் தொழிலொவ்வொன்றிற்கும் தக்க சன்மானஞ்

செய்யவுமிடமிருக்கிறது. இது எவ்வளவு சிறந்த வழி. பண்டை நாட்செய்த நல்வினை தீவினையின் பயனாகக் கொடுக்கப்பட்ட தனு கரணம் முதலியவைகளினுதவியால் மேலும் நற்கதி யெய்தத் தத்தம் ஆற்றலுக்கேற்ப வழி தேடிய விதம் வியக்கத்தக்கதே. பிறப்பினாற்பெருமை சிறுமை பாராட்டுவோர் முற்பிறப்புண்டென்றும், கர்ம விதிக்கேற்பவே சகலமும் நடக்கிறதென்றும், அதுவும் கடவுளுக்குச் சம்மதமாமென்றும், ஓருடம்பெடுத்த பின்னும் ஓர் ஆன்மா தன்னை நன்மைப்படுத்த விடமுண்டென்றும் உண்மைகளை அடிப்படையாகவுள்ளது. இதை அறியாதார் பிறப்பில் மாத்திரம் செம்மை காணும் குருட்டு வழக்கம் சைவரிடம் பெரிதும் உண்டென்றிகழ்வர். முற்பிறப்பாதிய வுண்மைகளை யறியாதோர் வேறென்ன வெண்ணுவர்.

## பிராமணர் தமிழரே

ஒரு காலத்தில் இங்கு வந்த ஆரியரே பிராமணரென்றும் அவர்களுக்குரிய பாஷை சம்ஸ்கிருதமென்றும் ஏனையவர்க்குரியது தமிழென்றும் ஆதாரமில்லாமல் ஒரு கூட்டமாயுள்ள மனிதரைச் சிலர் பிரிக்கின்றனர். இதுவும் சைவத்திற்குப் பெரும் கேடு விளைக்கின்றனர். அநாதியாய்ச் சிவசம்பந்தமான மார்க்கத்தவர் ஒரே இடத்திற்றான் இருந்தவர்கள். இங்குமங்குமுள்ள புலவர்கள் தத்தம் சிற்றூரிலிருந்த பாகுபாட்டைத் தொடுத்துக் கவிகளை யாத்தனர். சிறந்த நாகரிகம் வாய்ந்த விடங்களினுள்ள கவிகளும் ஓரே வழித் தங்கள் கவிகளிற் சைவ ஒழுங்குகளைப் பற்றியும் கூறினர். இந்த நிலைமைகளை யறியாதார் இருபுறம்பான நாகரிகமுள்ளவர்கள் சைவர்களென்று கொண்டது வியப்பே!

## சிவசின்னம்

சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் காவி இவைகள் பலன் தெரியாதவர்க்கும் பயனளிக்கும். இவற்றை நாகரிகமற்ற செய்கை யென்றே மதித்துப் பலர் இவைகளை இப்போது அணிகிறதில்லை. மோட்சமடைவதைப் பெரிதாக நினைத்தால் அல்லவோ இவைகளை யணிவார்கள். ஐரோப்பிய உடை நடை பாவனை பழக்க வழக்கங்களில் இவைகள் இல்லாதபடியால் இவைகளை பொரு

ரும் அதிகமணிந்துகொள்வதில்லை. இப்படியே நவீன முறையிலுள்ள ஒவ்வொன்றையும் எடுத்து ஆராயலாம்

இவைகளெல்லாம் நுழைந்த வழிகளெவை யென்று சற்றுக் கவனிப்பேன். பிறதேசினராலும் மிஷனரிமாராலுமே இவைகளிங்கு நுழைந்தன. இருவரும் வியாபார முகாந்தரமாகவே இங்கு வந்தனர். முந்தியவர்கள் தங்கள் பொருள்களை விற்கவும் எங்கள் பொருள்களை வாங்கவும் வந்தார்கள். அரசியலைக் கைப்பற்றுவது இலகுவாயிருந்தது; கைப்பற்றிக்கொண்டார்கள். ஆனாலும் வியாபாரமே அவர்கள் முக்கிய இலக்கு. பிந்தியவர்கள் அத்துடன் தங்கள் மார்க்கத்தையும் பரப்ப வந்தார்கள்; தங்களினதும் அரசினரதும் நாகரிகத்தைப் பரப்புவது இலகுவென்று கண்டார்கள்; பரப்பிவிட்டார்கள். கிறீஸ்து சுவாமிகளாவது அவருடைய போதனையாவது ஐரோப்பியங் கலவாதவழி யாதொரு கவர்ச்சியையும் எங்கள் மக்களிடம் கிளப்பியிராது. அவை இங்குள்ளவைதானே. எங்கள் நாகரிகத்திற்கு மிவ்வளவு தூரம் பங்கமும் நேரிட்டிருக்க மாட்டாது. அரசினர் நாகரிகமும் ஐரோப்பியம். அறிவு போதிக்க வந்த வர்க்கத்தினர் நாகரிகமும் ஐரோப்பியமே. இவர்களும் அவர்களைப்போன்ற தோற்றமு முடையவர்களானமையால் எங்கள் மக்கள் இருபகுதியினரையும் ஒருங்கே கணித்தனர். அவர்களுக்கும் பேராற்றல் வந்தது. ஒருங்கு திரண்டெங்கள் நாகரிகத்தைச் சேதித்தனரன்றோ! உலக ஈடேற்றத்திற்கோர் தெய்வ வித்தல்லவோ எங்கள் நாகரிகம். நாகரிகமிழந்தபின் மக்களுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசமில்லையே! பல்லாயிர வாண்டு தெய்விகம் வாய்ந்தோங்கிய திறலுடைய நாகரிகம் எங்கள் நாகரிகமென்றெண்ணினீர்களில்லையே! எங்கள் சாதியாரின் பெரும் பொக்கிஷம் முழுவதையும் நாசமாக்கிய குற்றமிவர்களுக்கென்று எப்பொழுதிவர்களறிவார்களோ? எப்படித்தான் பாவவிமோசனஞ்செய்யப்போகிறார்களோ! நாகரிகவுலகிற்கு தனிபெருவிருந்து எங்கள் நாகரிகமென்பதையுமிவர்களறியவில்லையே! அம்மம்ம! எங்கள் நாட்டின் பள்ளிக்கூடங்களையும் வைத்தியசாலைகளையும் ஏனைய பொதுஸ்தாபனங்களையும் துறைமுகங்களாகக் கொண்டு தங்கள் சரக்கை இறக்கிவிட்டார்களே! அதன் பயனாக இன்று எங்கள் சனசமூக

வாழ்க்கையும் குடும்பவாழ்க்கையும் ஐரோப்பியமாயினவே! எனவே பழக்க வழக்கம் உடை நடை பாவனை மனப்போக்கு செயலாதியன யாவும் ஐரோப்பியமாயினவே! எங்கள் பொது ஸ்தாபனங்களெல்லாம் எங்களுடைய செலவில் நடத்தப்பட்டு எங்கள் நாகரிகத்தைச் சிதைக்கும் கருவிகளாகவும் ஐரோப்பியத்தை இறக்குந் துறைகளாகவும் இருக்கின்றனவே! இது என்ன பரிதாபம்!

## நன்றி பாராட்டலாமா?

இவைகளை ஊன்றி நினைக்குந்தோறும் ஏனைப் எந்த அரசினரிலுஞ் சிறந்த அரசினராகிய பிரித்தானிய அரசினரைத் தானும் முழுமனத்துடன் போற்ற முடியவில்லை. சுமார் இருநூற்றாண்டுகளாகத் தம் தேசம் விட்டு நம் தேசத்தில் வந்து கல்வி வைத்தியமாதிய துறைகளில் உழைத்து வரும் பல பெரிய மிஷனரிமாரைப் பற்றியும் நன்றி பாராட்ட இடமில்லையே! அவர் ஒன்றை நினைக்க இன்னொன்றாக விளைந்ததோ! அல்லது நினைத்தபடி தான் முடிந்ததோ! ஆனால் இந்நாட்டில் எமக்கேற்பட்ட நஷ்டமோ அளப்பரிது. உலகத்திற் சிறந்த பொருள் ஞானம்; ஞானவழிகளைச் செப்பனிட்டு மக்களுக்கும் கடவுளுக்கும் தொடர்பு காட்டிய முறையில் இந்தியா சிறந்தது. அதிலும் தென் இந்தியா மிகச் சிறந்தது. தென் இந்திய நாகரிகம் இன்று மேற்காட்டிய ஏதுக்களால் அழிந்து போகிறது மெய்தானே!

இதுகாறும் கூறியவாற்றால் சைவம் இன்னதென்றும் பின் எப்படித் திரிந்து போயினதென்றும் இதற்குக்காரணங்கள் இவையென்றும் ஒருவாறு காட்டினேன். இனி நாம் செய்யவேண்டியவை எவையென்று கவனிப்பேன்.

1. சைவர்களாகிய வெங்கட்குற்ற தீங்குகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அரசினரை விசாரணை செய்தறியும்படி கேட்க வேண்டும்.

2. மிசனரிமாருக்கு எங்கள் நாட்டில் இவர்களால் வந்த மாற்றங்களைக் காட்டி உண்மையான கடவுள் ஞானமெங்களிடமெ

ன்று முள்ளதென்ற வுண்மையைக் காட்டி அதை மறுபடி கொண்டுவர உதவி செய்யுங்களென்று கேட்கவேண்டும்.

3 பள்ளிக்கூடங்கள் வைத்தியசாலைகள் கச்சேரி கோடு முதலிய பொது ஸ்தாபனங்களுள் நுழைந்த சைவத்திற்கு மாறான கொள்கைகள் இவை இவையென்று காட்டி நிவிர்த்திக்க வேண்டும்.

4 தமிழும் சம்ஸ்கிருதமும் நல்ல மாயிற் கற்கப்பட வேண்டும். அவைகளுக்குச் சன்மானமும் ஆக்கவேண்டும்.

5 சைவப்பள்ளிக்கூடங்களெல்லாவற்றிலும் சமயக் கல்வி சரியான முறையிலும் செவ்வையாகவும் கற்பிக்க வழி தேட வேண்டும்.

6. புராணப்பிரசங்கங்கள் சகல கோயில்களிலும் மறுபடியும் நடைபெறச் செய்ய வேண்டும்.

7. பாட புத்தகங்கள் சைவத்திற்கு மாறாக விருக்காதபடி பார்வை செய்யக்கூடிய ஒரு சபை யிருக்கவேண்டும்.

8. குரு பீடங்களமைக்கப்பெற்று ஆங்காங்கு தேவ பூசகர் முதலாய குருமார்கள் பயிற்றப்படல்வேண்டும்.

9. சைவசமய விஷயங்களைக் கூசாது எடுத்து வெளிப்படுத்தக் கூடிய பத்திரிகையும் வேண்டும்.

10. சைவசமய உபந்நியாசகர்கள் மூலமாகவுஞ் சைவத்தைப் பரப்பவேண்டும்.

11. வருடம் ஒரு முறையாவது பகிரங்கக் கூட்டங்கள் கூட வேண்டும்.

12. சாஸ்திரங்களுக்கு மாறாய் நடை பெறுஞ் செயல்களைச் சமாதானமாகக் களையவேண்டும்.